**செ. கு. எண்: 028** **நாள்: 19.02.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

---

அறிக்கை – 19.2.2018

ஆந்திரா மாநிலம், கடப்பா மாவட்டம், ஒண்டமேட்டா வனப்பகுதியில் உள்ள ஏரி ஒன்றில், சேலம் மாவட்டம், கரியகோவில் சரகம், அடியனூர் கிராமம், கீரங்காட்டைச் சேர்ந்த திரு. கருப்பண்ணன், திரு. ஜெயராஜ், திரு. சின்னபையன், திரு. சின்னதம்பி மகன் திரு. முருகேசன் மற்றும் திரு. அண்ணாமலை மகன் திரு. முருகேசன் ஆகிய ஐந்து நபர்களின் சடலங்கள் ஆந்திரா மாநில காவல் துறையினரால் கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஐந்து நபர்களின் உடல்களை தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களின் சொந்த ஊர்களுக்கு கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளை செய்யவும், இச்சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளவும் காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இறந்தவர்களின் உடல்களை அடையாளம் கண்டு பிரேத பரிசோதனை முடிப்பதற்காக கடப்பா ரிம்ஸ் அரசு மருத்துவமனைக்கு சேலம் மாவட்ட காவல் துறை ஆய்வாளர் தலைமையில் தனிப்படை ஒன்று ஆந்திரா மாநிலத்திற்கு உடனடியாக செல்லும்படி உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தின் தன்மையையும், இறந்தவர்களின் குடும்ப வறிய நிலையையும் கருத்தில் கொண்டு, சிறப்பினமாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**